கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.75/2023

வா.சா.1 - ஜெயசீலன்

நாள். .2025 த/பெ - சிலுவை அந்தோணி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1, 2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் என்ன வேலை பார்த்தேன் என்றால் நான் வருவாய் துறையில் வட்டாட்சியராக வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன். எனக்கு நீதிமன்றத்தின் நடைமுறை வழங்கங்கள் தெரியும் என்றால் சரிதான். நான் இவ்வழக்கை எனது மகனின் பவர் ஏஜென்ட் என்ற நிலையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் இரண்டு தபசில் சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1ம் தபசில் சொத்தை பொறுத்து பரிகாரம் ஏதும் கோரவில்லை என்றால் இரண்டு தபசில் சொத்துக்கள் ஒன்று தான். 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதிதான் இரண்டாம் தபசில் சொத்து என பரிகாரம் ஏதும் கோரவில்லை என்றால் 1ம் தபசில் சொத்தும், 2ம் தபசில் சொத்தும் ஒரே சர்வே எண்கள் தான். சர்வே எண்.498/22 வீடுகள் இருந்தது, இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வீடுகள் அகற்றப்பட்டு காலிமனையாக உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு தபசில் விவரத்தில் சர்வே எண்.498/22 ல் வீடுகள் இருப்பதாகவும், மின் இணைப்பு இருப்பதாகவும் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தற்போது காலி மனையாகதான் உள்ளது.

2) இவ்வழக்கு சொத்து மற்றும் வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள சொத்து ஆரம்பகாலத்தில் வேலாயுத நாடாருக்கு சொந்தமானது என்றால் சரிதான், பின்னர் வேலாயுத நாடாரின் வாரிசுகளுக்கு பாகபிரிவினை செய்யப்பட்டது. வேலாயுத நாடார் காலத்திற்குபிறகு செல்வராஜ் மற்றும் 1ம் பிரதிவாதி தங்கராஜ் சேர்ந்து வா.சா.ஆ.8 படி பாகபிரிவினை செய்து கொண்டனர் என்றால் சரிதான். சர்வே எண்.498/22 ல் கிழக்கு பார்த்த வீடு இருந்தது என்றால் சரிதான், மேற்படி வீடு செல்வராஜுக்குரிய பங்கில் இருந்தது. மேற்படி வீட்டை நான் செல்வராஜுடம் இருந்து கிரையம் பெற்றேன். நான் மேற்படி வீட்டை முழுமையாக கிரையம் வாங்காமல் பகுதியாக கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான், நான் கிரையம் வாங்கிய பகுதியில் தான் மிண் இணைப்பும், குடிநீர் இணைப்பும் இருந்தது.



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.01.19 15:08:20 +0530

இன்றைய தேதியில் மேற்படி மின் இணைப்பும், குடிநீர் இணைப்பும் இல்லை என்றால் சரியல்ல, என்னுடைய மகன் ஸ்டெர்னி பெயரில் உள்ளது. இல்லாத வீட்டிற்கு பொய்யாக மின் இணைப்பும், குடிநீர் இணைப்பும் உள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) சர்வே எண்.498/22 கிழக்கு பக்கம் தென்வடலாக தெரு உள்ளது என்றால் சரிதான். மேற்படி தெரு அரசுக்கு பாத்தியப்பட்ட தெரு என்றால் சரிதான். மேற்படி தெருவில் எனக்கு உரிமை பாத்தியதை கிடையாது என்றால் சரிதான். நான் செல்வராஜுடம் இருந்து தான் வழக்கு 1ம் தபசில் சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி கிரையம் வாங்கிய காலத்தில் 1ம் தபசில் சொத்தில் வீடு இருந்ததாக பொய்யாக கூறி கிரையம் வாங்கினேன் என்றால் சரியல்ல, வீடு இருந்ததால் தான் மின் இணைப்பும், குடிநீர் இணைப்பும் இருந்தது. பழைய வீட்டை செல்வராஜும், 1ம் பிரதிவாதி அனுபவம் செய்த காலத்தில்தான் மேற்படி வீடு அகற்றப்பட்டது என்றால் நான் செல்வராஜுடம் கிரையம் பெற்றபிறகுதான் வீடு அகற்றப்பட்டது.

4) எனது மகனுக்கு நான் செட்டில்மெண்ட் ஏற்படுத்திய காலம் வீடு இருந்ததா என்றால் இருந்தது. எனது மகன் வீட்டை அகற்றியதாகவோ அல்லது எனது மகனுக்காக நான் வீட்டை அகற்றியதாக இவ்வழக்கில் கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை, நான் கிரையம் பெற்ற பிறகுதான் வீட்டை அகற்றினேன். என்னிடம் காட்டப்படும் முதல்விசாரணை வாக்குமூலம் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தங்கராஜ் என்பவர் ஆண் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் கணவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரிதான். வழக்கு பிராதில் 2ம் பிரதிவாதி 1ம்பிரதிவாதியின் சகோதரர் என்று தான் உள்ளது. வழக்கு சொத்தின் வடபுறத்தின் கிழமேல் அடி எவ்வளவு உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், 19.8 மீட்டர் ஆகும். மேற்படி கிழமேல் அடி 19.8 மீட்டரில் மேற்கிருந்து கிழக்காக 10 மீட்டர் அகலத்தில் கல்கால் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 10 மீட்டருக்கு கிழக்குபக்கம் தகர செட்டால் அடைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், என்னுடைய பாதுகாப்பிற்காக அடைக்கப்பட்டுள்ளது. இன்றைய தேதி வரை அடைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.01.19 15:08:24 +0530

வழக்கு சொத்தின் கிழக்கடைய தென்வடல் அடி எவ்வளவு என்றால் 5.6 மீட்டர் ஆகும். மேற்படி 5.6 மீட்டர் அளவும் தகர செட்டால் முடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பிராதிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் 1ம் பிரதிவாதி என்னுடைய அனுபவத்தை இடைஞ்சல் செய்தார் என சொல்லவில்லை என்றால் 1ம் பிரதிவாதி என்னுடைய அனுபவத்தை இடையூறு செய்தார். 1ம் பிரதிவாதி எப்போது என்னுடை அனுபவத்தை இடையூறு செய்தார் என வழக்குரையில் குறிப்பிடாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் 3 நபர்களும் சேர்ந்து என்னுடைய அனுபவத்தை இடையூறு செய்ததால் தான் நான் இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளேன்.

(1, 2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.01.19 15:08:28 +0530